# வண. சிங்கராயரின் ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சியமாக நீதிமன்றத்தில் ஏற்கமுடியும்!

Registered as a Newspaper in Sri Lanka விலை ரூபா ஒன்று

ஈழமுரசு

முரசு 2 13-12-85 வெள்ளி (கார்த்திகை 28 ரபியு அவ் 30) முழக்கம் 308

## மேல்நீதிபதி நேற்றுத் தீர்ப்பு

(கொழும்பு)

வண. பிதா சிங்கராயருக்கு எதிராக நடைபெற்றுவரும் வழக்கில் அவரால் ஏற்கனவே பொலிஸாருக்கு வழங்கப்பட்ட ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சியமாக நீதிமன்றத்தில் ஏற்றுக்கொள்ள முடியுமா என்று நடைபெற்ற வாதத்துக்கு, "அதனை சாட்சியமாக ஏற்றுக் கொள்ள முடியுமென்று" கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பளித்தது. மேல் நீதிமன்ற நீதிபதி திரு. எச். டபிள்யூ. சேனநாயக்கா இந்தத் தீர்ப்பை நேற்று வழங்கினார். கடந்த ஒரு வருடமாக நடைபெற்ற வழக்கு விசாரணையில், வண பிதா சிங்கராயரால் முன்னர் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட "பி.37" இலக்க தஸ்தாவேஜான ஒப்புதல் வாக்கு மூலத்தை சாட்சியமாக ஏற்கக் கூடாதென, அவருக்க க ஆஜரான வழக்கறிஞர்கள் வாதாடினார்கள். இதற்கான தீர்ப்பே நேற்று நீதிபதியால் வழங்கப்பட்டது. அவரது ஒப்புதல் வாக்கு மூலத்தைச் சாட்சியமாக ஏற்கலாமென நீதிபதி தீர்ப்பளித்ததால் வழக்கு விசாரணை இம்மாதம் 16ம் திகதி முதல் தொடர்ந்து நடைபெறும்.

★ வண்ணை பெருமாள் கோவிலைப் படம்பிடிப்பதற்குச் சென்றார்களாம்!

# யாழ்நகரில் ராணுவம் சுட்டு இரு வயோதிபர் ஸ்தலத்தில் பலி

## மூன்று இளைஞர்கள் படுகாயம்; வாகனங்கள் சேதமாக்கப்பட்டன; பரீட்சையும் குழப்பம்

(எட்வர்ட் லியோன்)

நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் நேற்றுப் பகல் கவச வண்டிகளில் யாழ்நகருக்குள் நுழைந்த ராணுவத்தினர் திடீரென மேற்கொண்ட துப்பாக்கிப்பிரயோகத்தினால் இரு வயோதிபர்கள் பஸ் நிலையத்துக்கு அருகாமையிலுள்ள விதிகளில் துடிதுடித்து மரணமானார்கள். இவர்களில் ஒருவர் தலை சிதறிய நிலையில் இரத்த வெள்ளத்தில் கிடக்கக் காணப்பட்டார். படுகாயமடைந்த மூன்று இளைஞர்கள் சிகிச்சைக்காக யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

சூடுபட்டு மரணமானவர்கள் மலாயன் பென்ஷனியரான மானிப்பாயைச் சேர்ந்த கே. துரைச்சாமி (79), யாழ்நகரில்நாட்டாண்மையாகத் தொழில்புரியும் பீச் வீதியைச் சேர்ந்த கிருஷ்ணபிள்ளை (58) ஆகியோர் என அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்களது சடலங்கள் மரண விசாரணைக்காக ஆஸ்பத்திரி சவச்சாலையில்வைக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் சாயி ஸ்ரோர்ஸில் கடமையாற்றும் திருநெல்வேலியைச் சேர்ந்த எஸ். மதியழகன் (17) படுகாயமுற்றதால் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டதும் சத்திரசிகிச்சைக்குட்படுத்தப்பட்டார். முஸ்லிம் வட்டாரத்தைச் சேர்ந்த எஸ். சுபைர் (18), மணிக்கூட்டு வீதியைச் சேர்ந்த கே. ஜெயவீரசிங்கம் (23) ஆகிய இருவருமே சூட்டுக்காயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட மற்றிருவராவர் அச்சுவேலி பலநோக்கக் கூட்டுறவுச் சங்க இளைஞரான சுப்பையா என்பவரும்

... 6ம் பக்கம் பார்க்க

## இன்ரசிற்றி ரயிலில் குண்டு வெடித்தது!

(கொழும்பு)

நேற்று யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு சென்ற இன்ரசிற்றி ரயிலில் குண்டு வெடித்ததால் ஒரு பெட்டி முற்றாகச் சேதமடைந்தது.

யாழ்ப்பாணத்திலிருந்து சென்ற பயணிகளை கோட்டை புகையிரத நிலையத்தில் இறக்கிவிட்டு, வெறுமனே மருதானை தரிப்பு நிலையத்துக்குத் திரும்பிக் கொண்டிருக்கையிலேயே குண்டு வெடித்தது.

சுமார் இரண்டு மணியளவில் இது நடைபெற்றது. மர்ம

...6ம் பக்கம் பார்க்க

## புளொட் இயக்கத்தின் மூவர் அரியாலையில் சுட்டுக் கொலை

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தைச் (புளொட்) சேர்ந்த மூவர் நேற்று முன்தினமிரவு அரியாலையில் வைத்து சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மற்றொரு இயக்கத்தைச் சேர்ந்தவர்களே இவர்களைக் கொலை செய்ததாக 'புளொட்'டினால் ஒட்டப்பட்டுள்ள சுவரொட்டிகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

...6ஆம் பக்கம் பார்க்க

## தோப்பூரில் நான்கு பெண்கள் கற்பழிக்கப்பட்டதாக புகார்!

(திருமலை)

மூதூரிலுள்ள தோப்பூர் என்னுமிடத்தில் ஒரே நேரத்தில் நான்கு வீடுகளுக்குள் வைத்து நான்கு பெண்கள் கற்பழிக்கப்பட்டதாகப் புகார் செய்யப்பட்டுள்ளது.

இவர்களின் வீடுகளுக்குவந்த சிருடையினர், அவர்களது கணவர்மாரை விசாரணைக்கென வெளியே அழைத்துச் சென்றுவிட்டு, பின்னர் வீடுகளுக்குள் சென்று மனைவிமாரைக் கற்பழித்ததாகப் புகார் செய்யப்பட்டுள்ளது.

இதில் பாதிக்கப்பட்ட ஒருவர் குழந்தையொன்றைப் பிரசவித்து மூன்று மாதம்கூட முடியவில்லையாம்.

இன்று திருமலை வரும் யுத்த

...6-ஆம் பக்கம் பார்க்க

## நேற்று அதிகாலை நடந்தது:

## காங்கேசன்துறை குண்டு வெடிப்பில் மூவர் மரணம்?

(காங்கேசன்துறை)

காங்கேசன்துறைப் பகுதியில் நேற்று அதிகாலை தவறுதலாக இடம்பெற்றதாகக் கூறப்படும் குண்டு வெடிப்புச் சம்பவமொன்றில் மூன்று இனம் தெரியாதவர்கள் மரணமானதாகத் தெரியவந்துள்ளது.

இங்குள்ள புகையிரதபாதைக்கு அண்மையிலுள்ள இடமொன்றிலிருந்து நேற்று அதி

... 6ம் பக்கம் பார்க்க

## விமான விபத்தில் 250 ராணுவம் பலி

(கனடா)

இருநூற்றைம்பது இராணுவ வீரர்களுடனும், எட்டு

...6ம் பக்கம் பார்க்க

## ஈழம் தேசிய விடுதலை முன்னணி அறிவிப்பு:

## 'நேபாம்' குண்டுகளைப் பாவித்து இறுதியான தாக்குதலுக்கு அரச படை தயாராகிறது!

(சென்னை)

வடபகுதியிலுள்ள தமிழ்ப் போராளிகள் மீது இறுதியான பெரும் தாக்குதல் ஒன்றை நடத்துவதற்கு இலங்கை அரசின் படைகள் தயாராகிக் கொண்டிருப்பதாக ஈழம் தேசிய விடுதலை முன்னணியின் பேச்சாளர் ஒருவர் சென்னையில் தெரிவித்துள்ளார்.

இதற்காக 'நேபாம்' என்ற எரிகுண்டுகள் விமானமூலமாக வடபகுதிக்கு அனுப்பப்படுவதாகவும், சில விமானங்களை ஓட்டுவதற்கு மலேசிய கூலிப் படைகள் அமர்த்தப்பட்டுள்ளதாகவும் அப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

இத்தாக்குதலை நடத்துவதற்காக ஆயிரக்கணக்கான இராணுவமும் துருப்புக்களும் வட இலங்கையில் குவிக்கப்படுகின்றன எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## இயக்க மோதலைக்கண்டித்து அன்னையர்நேற்று ஊர்வலம்

இயக்கங்களிடையே நடைபெறும் மோதல்களைக் கண்டித்து நூற்றுக் கணக்கான அன்னையர்கள் உரும்பராயிலிருந்து கோண்டாவிலூடாக கொக்குவில் வரை சுலோக அட்டைகளையும் தாங்கியவாறு மௌன ஊர்வலம் ஒன்றை நேற்று நடத்தினார்கள்.

ஊர்வலத்தின் முன்னால் சென்ற வாகனத்தில் கொடும்பாவி ஒன்று கட்டப்பட்டிருந்தது. வானில் சோக இசை ஒலி பரப்பப்பட்டது.

"ஈழப் போரே எமக்குவேண்டும்: இயக்கப் போர் எமக்கு வேண்டாம்," "எமது பிள்ளை

- 6ம் பக்கம் பார்க்க

## சுடப்பட்டு இருவர் மரணம்

(திருமலை)

ஆலங்கேணிப் பகுதியில் ஆயுதங்களுடன் சென்றவர்கள்

... 6ம் பக்கம் பார்க்க

விற்பனையிலும் வாசகர் தொகையிலும் முன்னணியில் ஈழமுரசு

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

வலம்புரி சங்கு

இல்லங்களில் இலட்சுமிகரம் நிலவுவதற்கும் ஆலயங்களில் பூசை ஆராதனைகளுக்கும் பாவிப்பதற்கு உகந்த அரிய பொக்கிஷம். தாஸ், மாணவர் அறப்பணி மன்றம், 59, மீனாட்சிஅம்மன்வீதி, பண்ணை.

### மணமகள் தேவை

யாழ். இந்து உயர்கோபியர் குலம். மேற்கு ஜேர்மனியில் வேலைசெய்த, 1-1-59ல்பிறந்த, செவ்வாய் தோஷமற்ற, அழகிய ஆரோக்கியமான இளைஞருக்கு பத்தொன்பது வயதிற் குட்பட்ட, பிறப்புவிதிஎண்கள் 4-5 5-4 ஆகியவை கொண்ட, அழகான மெல்லிய தோற்றமுடைய மணமகள் தேவை. முழு விபரங்களுடனும், அண்மையில் எடுத்த புகைப்படத்துடனும் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி - மல்ரி சேவிசஸ் 37(351) மணிக்கூட்டு வீதி (வெலிங்டன் தியேட்டர் சந்தி) யாழ்ப்பாணம்.

வைத்திய கலாநிதி அறிவுறுத்து

# குழந்தையின் பற்களில் அதி முக்கிய கவனம் தேவை

(சாவகச்சேரி)

"இனிப்பு, சொக்கிலெட், டொபி இந்த இனிப்புப் பொருட்கள் பல் ஈறுகளில் சுலபமாகத் தங்கிக்கொள்ளும். இது குழந்தைகளின் பற் சுகாதாரத்தைப் பெரிதும் பாதிக்கும். இவற்றைக் குறைத்து பழவகைகளைக் கொடுக்கலாம். இதில் பெற்றோர் அக்கறை செலுத்த வேண்டும்."

சாவகச்சேரி ஆஸ்பத்திரி பற் பகுதி வைத்திய கலாநிதி சண்முகநாதன், சாவகச்சேரியில் நடைபெற்ற ஆரம்ப சுகாதார சிகிச்சை நிலையத் தொண்டர்களுக்கு பயிற்சியளிக்கையில் மேற் கண்டவாறு அறிவுறுத்தினார்.

சுகாதாரப் பரிசோதகர்திரு. எஸ். செல்வபாஸ்கரதுரைநாயகம் தலைமையில் ஆரம்பமான இவ் வைபவத்தில் டாக்டர் சண்முகநாதன் தொடர்ந்து பேசுகையில் கொய்யாப்பழம் அப்பிள் பழம், நார்த் தன்மையுள்ள பழவகைகள், காய்கறிகள்' பனங்கிழங்கு பற்களைச் சுத்தம் செய்யக் கூடியன.

பல் சுத்தம் செய்வதற்கு பற்பசையைப் பாவித்தாலும் சரி, பற் பொடி பாவித்தாலும் சரி மீடியம் பிரஷ் பாவிக்க வேண்டியது அவசியம் பற்பசையில் புளோரைற் கலந்துள்ளது. அது பல் ஈறுகளிலும் பல்லிலுமுள்ள கழிவை அகற்றி விடும். தேநீர் சிறு மீன் உருளைக் கிழங்கு, தக்காளி, வெங்காயம் ஆகியவற்றிலும் புளோறைற் இருக்கிறது.

குழந்தைகளைப் பொறுத்த அளவில்பல்முளைத்த காலத்தில் அது பால்பல் சீக்கிரம் விழுந்து விடும் என்று அதில் அக்கறை கொள்ளாத பெற்றோரும் உண்டு. ஆனல் அது தவறு. பால் பல் வேரிலிருந்துதான் மற்றப் பல் முளைக்கும். ஆகவே பாற் பல்லில் கிருமி சேர்கைக்கு இடமளிக்கக் கூடாது என்றார்.

வைத்திய கலாநிதி எஸ். எவ் அருள்நேசன், சுவாசப்பை பற்றியும், அது தொடர்பான, தொற்று நோய் கிருமிகள் பற்றியும் விளக்கினர்.

## ஆரம்ப சுகாதார நிலையம்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை மெலிஞ்சுமுனைக் கிராமத்தில் முதலுதவி ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்று ஆரம்பிக்கப் பட்டுள்ளது. வசதிகள் குறைந்த இக் கிராமத்துக்கான இந்நிலையம் ஊர்காவற்றுறை மக்கள் சுகாதார விழிப்புக் குழுவின் முயற்சியினல், ஊர்காவற்றுறை மாவட்ட சுகாதார அதிகாரியின் ஆதரவுடன் ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

இவ்வைபவத்திற்குக் கரம்பன் பங்குத் தந்தை வணபிதா லோறன்ஸ் அடிகள் தலைமை தாங்கினர். மக்கள் சுகாதார விழிப்புக்குழு அமைப்பாளர் டாக்டர் எஸ். விஸ்வேர ஐயர், இந்நிலையம், இக்கிராமத்துப் பயிற்சி பெற்ற தொண்டர்களால் பரிபாலிக்கப்பட வேண்டிய வழிவகைகளையும், ஆலோசனைகளையும் வழங்கினர்.

ஊர்காவற்றுறை அரசினர் வைத்தியசாலை அதிகாரி டாக்டர் செல்வி. வ. கதிர்காமலிங்கம் தொற்று நோய்களும், பாதுகாப்பு நடவடிக்கைகளும் என்னும் விடயம் பற்றி உரையாற்றினர்.

சுகாதாரப் பரிசோதகர் திரு. எஸ். துரைராசா உட்பட மற்றும் பலரும் உரையாற்றினர்கள்.

## ஒளிவிழா

(புங்குடுதீவு)

நெடுந்தீவு மகாவித்தியாலயத்தில் ஒளிவிழா வெகு சிறப்பாக நடைபெற்றது. புலவர் ஏ. டபிள்யூ. அரியநாயகம் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் நெடுந்தீவு மகாவித்தியாலய அதிபர் திரு. பி. எம். ஜே. அன்ரனி உட்படப் பலர் உரையாற்றினர்.


திருப்பலி பூசை ஆராதனையைத தொடர்ந்து இசை, நடனம், நாடக நிகழ்ச்சிகள் பல இவ்விழாவில் இடம் பெற்றன. சகல மதத்தவர்களும் இவ்விழா நிகழ்ச்சிகளைக் கண்டு களித்தனர்.

## உற்சவம்

(கல்வியங்காடு)

நல்லூர் சட்டநாதர் சிவன் கோவில் நல்லைநாயகி சமேத நல்லைநாதப் பெருமானின் புதிய சித்திரத் தேருக்கான பவளக்கால் நாட்டும் வைபவம் இன்று வெள்ளிக் கிழமை பகல் 11-30 மணியிலிருந்து 12.00 மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் நடைபெறவுள்ளது.

## பிறந்தநாள் வாழ்த்து



⌘ அரியாலை புங்கன்குளம் தவராஜா - கமலாதேவி தம்பதியின் மகன் ராகேஷ் இன்று தனது நான்காவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறர்.

⌘ கீரிமலை மயில்வாகனம் அன்னலக்ஷ்மி தம்பதியின் மகன் ஜெயபாரதி இன்று தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறர்.

⌘ மாதகல் கனுல் வீதி பத்திநாதர் - ஜெனிற்ரு தம்பதியின் மகன் றிச்சாட் இன்று தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறர்.

⌘ சுழிபுரம் சிவநேசன் தம்பதியின் மகன் சிவசூரியர் இன்று தனது இரண்டாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறர்.

⌘ கிளிநொச்சி திருநகர் அருள்ராஜா - றூபினு தம்பதியின் மகள் தர்சினி இன்று தனது மூன்றுவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறர்.

⌘ ஊர்காவற்றுறை பிலிப்பையா - றேஸ்மலர் தம்பதியின் மகன் அருள்நேசன் இன்று தனது ஐந்தாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறர்.

⌘ பருத்தித்துறை இரண்டாம் குறுக்குத் தெரு பாலசுப்பிரமணியம் - லோகநாயகி தம்பதியின் மகன் முரளிதரன் இன்று தனது ஒன்பதவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறர்.

## முல்லைத்தீவு பிரஜைகள் குழு

முல்லைத்தீவு மாவட்டத்திற்கான பிரஜைகள் குழு ஒன்று கடந்த முதலாம் திகதி முல்லைத்தீவு மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற கூட்டத்தில் அமைக்கப்பட்டது.

குழுவின் போஷகராக அருட்திரு. பொஸ்கோ அடிகளாரும், தலைவராக திரு. எஸ் கனகசபையும் தெரிவு செய்யப்பட்டார்கள்.

குழுவின் ஏனைய உறுப்பினர்கள் விபரம் வருமாறு: உப-தலைவர்கள்: திருவாளர்கள் ஏ. சென் ஜோர்ஜ் வாஷிங்டன்; பொன். சந்திரசேகரி; முத்து சுப்பிரமணியம். இணைப் புச் செயலாளர்கள்: பொ. சேதுபதி; ரி. தியாகராஜா. பொருளாளர்: பி. அந்தோனிப்பிள்ளை.

# பண்டத்தரிப்பு சந்தையில் முடிச்சுமாறிகள் தர்பார்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்புச் சந்தையில் முடிச்சுமாறிகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளது.

இதுவரை காலமும் சைக்கிள் திருடர்களே தமது கைவரிசையைக் காட்டி வந்தனர். இவ்வருடம் 43 சைக்கிள்கள் பண்டத்தரிப்பு சந்தைப் பகுதியில் திருட்டுப் போயுள்ளன. எவரது சைக்கிளும் மீட்கப்படவில்லை.

தற்பொழுது மீன் வாங்க சந்தைக்கு செல்லும் பலரது சேட். பொக்கற்றிற்குள் இருக்கும் பணம் மாயமாகி வருகின்றன

கடந்த வாரம் ஏழாலை வாசி ஒருவர் மீன் விலை பேசிவிட்டு பணம் கொடுக்க பொக்கற்றில் கை வைத்தபோது என்பலப்பில் வைத்திருந்த பணம் 605 ரூபாவும் அதனுடன் இருந்த அடையாள அட்டையையும் காணவில்லையாம். 3 நாட்களின்பின் விளான் விநாயகர் கோவில் வீதியில் அவரது அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டது.

இதற்கு சில தினங்களுக்கு முன்சில்லாலை ஆசிரியர் ஒருவர் மீன் சந்தைக்குள் தனது பணம் 100 ரூபாவை பறிகொடுத்துள்ளார்.

# வீட்டிற்குள் கஞ்சி குடித்துக் கொண்டிருந்தவர் கைது

இவ்வார முற்பகுதியில் நாவற்குழிப் பகுதியில் தேடுதல் நடாத்திய ஆயுதப்படையினரால் கைது செய்யப்பட்ட ஏ. செபஸ்தியன் (20). ராஜரட்ணம் (24) ஆகிய இரு இளைஞர்களையும் விடுவிக்கும்படி இவர்களின் பெற்றோர் யாழ். அரசாங்க அதிபரிடம் கோரியுள்ளனர்.

கைதானவர்களின் தாயார் ஒருவர் இதுபற்றி கூறுகையில் கடந்த திங்கட்கிழமை எனது மகன் கஞ்சி குடித்துக் கொண்டிருந்தபோது திடீரென வீட்டிற்குள் புகுந்த சீருடையினர் குடித்த கஞ்சியையும் தட்டி, மகனைத் தாக்கியும் கூட்டிச் சென்றனராம். அவர்கள் விடும்படி கெஞ்சிய போது நாம் முந்திய மாதிரி "பொன்ன ஆமியில்லை" என்றார்களாம்.

## 2 கப்பல்கள் வந்துள்ளன

வடபகுதிக்கு இரண்டு உணவுக் கப்பல்கள் நேற்று மாலை வந்தன. மேர்கஸ் தங்காலை என்ற கப்பலில் தொள்ளாயிரத்து எழுபத்தைந்து மெற்றிக் தொன் சீனியும், 'பெந்தொட்ட' என்ற கப்பலில் தொள்ளாயிரத்து ஐம்பது மெற்றிக் தொன் மாவும் காங்கேசன்துறை துறைமுகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

"வெளியான A/L பெறுபேறுகள்"
திருப்தி அளிக்கவில்லையா?
புகழ் வாய்ந்த
கணக்காய்வாளர்களாவதற்கு!
அரிய சந்தர்ப்பம்
I. C. M. A
(Section A - May '86 Exam)
புதிய பிரிவு Dec. 16 முதல்
★ ஏனைய பிரிவுகள் சென்றவாரம் ஆரம்பமாகிவிட்டன.
★ திருவாளர்கள் V, கருணாநிதி, K. P. அரவிந்தன், S. சிவபாலன் உட்பட, பிரபல விரிவுரையாளர்கள் ஆற்றும் ஈடிணையற்ற சேவை.
...ட இலங்கையில் இருந்து அகில உலகப் பரிசில்களை தட்டிக் கொண்ட மாணவர்களை உருவாக்கிய தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்.
நாடுங்கள்
RAPID RESULTS INSTITUTE
212, Kachcheri - Nallur Road, Jaffna
"GOOD WINE NEEDS NO BUSH"

வரணி கலைவாணி கல்வி நிலையமும்,
சத்யா வெளிப்புறப் படப்பிடிப்பு
நிறுவனமும் இணைந்து நடாத்தும்
Good Bae 85 Musical Show
நவரச விழா
இடம்: சுட்டிபுரம் கண்ணகை கலையரங்கு
காலம்: நாளை 14-12-85 சனிக்கிழமை இரவு 7 மணி
(7 மணிக்கே நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும்)
● அருண இசைக் குழுவினரின் இன்னிசை விருந்துடன்
● பாட்டுக்குப் பாட்டு
● தேனிசை மழை
● பாட்டுடன் காட்சியும் கானமும் (தனி நடிப்பு)
● K. S. ராஜவுடன் இரு நிமிடங்கள்
நிகழ்ச்சியை அலங்கரிக்க
இலங்கை வானெலி புகழ் (கே. எஸ். ராஜ)
● மணிக்குரல் 'மேஜர் ஷண்'
● லோகேஸ்
ஏமாற்றத்தைத் தவிர்க்க டிக்கட்டுக்கு முந்துங்கள்.
டிக்கட்: 5/-, 3/-
நிகழ்ச்சியில் பங்குபற்றும் அனுமதி பத்திரம் 10/-
(நிகழ்ச்சி ஒன்றிற்கு)
டிக்கட் கிடைக்கும் இடங்கள்:
கலைவாணி கல்வி நிலையம், யா/வரணி மகாவித்தியாலய அருகாமை, இயற்றாலை றோட், கரம்பைக்குறிச்சி, வரணி.
இளவரசி ரெக்ஸ்ரைல்ஸ், கண்டி றோட், கொடிகாமம்.
A. V. M. ஸ்ருடியோ, கண்டி றோட், கொடிகாமம்.
மண்டப வாயிலிலும்.
வணக்கம்.

## கிராமிய அபிவிருத்தியின்கீழ்
# முல்லைத்தீவுப் பாடசாலைகள் வளர்ச்சி பெறத்திட்டம்

(ஒட்டுசுட்டான்)

நெதர்லாந்தின் உதவியுடன் கிராமிய ஒன்றிணைக்கப்பட்ட மூன்று ஆண்டு வளர்ச்சித் திட்டம் மூலம் முல்லைத்தீவுக் கல்வி மாவட்டத்தில் உள்ள பல பாடசாலைகள் நன்மையடையவிருக்கின்றன.

பின்தங்கிய பிரதேசமாகிய முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள பல பாடசாலைகள் கட்டட, தளபாட வசதியில்லாமல் இருக்கின்றது. இட நெருக்கடி காரணமாக பாடசாலைகளில் மாணவர்களைப் புதிதாகச் சேர்க்க முடியாமல் இருக்கின்றது. முல்லைத்தீவு கல்வி மாவட்டத்தில் இப்படியான குறைகள் இருக்கும் பாடசாலை விபரங்களைச் சேகரிக்க முல்லைத்தீவுக் கல்விப் பணிப்பாளர் ஜனாப். எம். எம். மன்சூர், திட்டம் ஒன்று வகுத்துச் செயற்பட்டுள்ளார்.

இந்தத்திட்டத்துக்கு அமைய மாங்குள வட்டாரத்திலுள்ள கட்டட, தளபாட பற்றாக்குறைகள் இருக்கும் பாடசாலைகளின் விபரங்களைச் சேகரித்து மாங்குளம் வட்டாரக்கல்வி அதிகாரி திரு. மு. சிவானந்தம், முல்லைத்தீவுக்கல்விப்பணிமனைக்கு அனுப்பியுள்ளார் முல்லைத்தீவுக் கல்விப் பணிப்பாளரின் முயற்சியினால் பின்தங்கிய பாடசாலைகள் பல நன்மையடையவிருக்கின்றன.

# யாழ். மாவட்டத்தில் அடுத்த வருடம் 1048 குடும்பங்கள் வீடமைப்புகடன் பெறவுள்ளன

(நயினாதீவு)

"எதிர்வரும் புத்தாண்டில் யாழ். மாவட்டத்தில் உள்ள 24 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலுமிருந்து தேசிய வீடமைப்பு அதிகார சபை பத்து இலட்சம் வீடமைப்புத் திட்டத்தின் கீழ் சுமார் 1048 குடும்பங்களுக்குக் கடன் வழங்கத் தீர்மானித்துள்ளது. இக்கடன் தொகையின் எண்ணிக்கைவழங்கப்படும்தொகைக்கேற்ப கூடிக் குறையலாம்."

யாழ். வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் கருத்தரங்கு ஒன்றில் உரையாற்றிய மாவட்ட முகாமையாளர் திரு த. பூ. முருகையா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ் மாவட்ட விசேட சேவை அலுவலர்கள், வீடமைப்பு உத்தியோகத்தர்கள் அதிகார சபையின் உயர்மட்ட உத்தியோகத்தர்கள் இக்கருத்தரங்கில் பங்கு பற்றினார்கள்.

அவர் மேலும் பேசுகையில் தற்போது வீடமைப்பு உத்தியோகத்தர்களாலும் குடியிருப்பாளர் சங்கங்களாலும் வசூலிக்கப்படும் யாழ் மாவட்ட அரச வாடகை வீடுகளின் வாடகைப் பணம் புத்தாண்டிலிருந்து விசேட சேவை அலுவலர்களாலேயே வசூலிக்கப் படவுள்ளன.

ஐக்கிய நாணய சங்கங்கள் மூலம் கடன் வழங்குவது தற்போது பரீட்சார்த்த முறையில் மேற்கொள்ளப்படவிருப்பதாகவும் இவ்விடயம் பற்றி மேலும் மதிப்பீடுகளை நடத்துவதற்காக விசேட சேவை அலுவலர் குழுவொன்றும் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

கிராமங்களிலுள்ள வீடமைப்புக்குழு விசேட சேவை அலுவலர்கள் ஆகியோரிடமே இவ் வீடமைப்புத் திட்டத்தின் வெற்றி தங்கியுள்ளது. சம்பந்தப்பட்டவர்கள் இன்றுசெயற்படுவது போல் தொடர்ந்தும் உற்சாகத்துடன் தொழிற்படவேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

வங்கிகளின் ஏற்படும் காலதாமதமே நிர்மாண வேலைகளின் தாமதத்திற்கான காரணம் என விசேட சேவை அலுவலங்கள் தெரிவித்தன.

பொது மக்களின் குறைகளை அறிந்து அவற்றை ஏற்ற வகையில் நீக்கி, இத் திட்டத்தின் முழுப்பயனையும் யாழ். மாவட்ட மக்கள் அனுபவிக்கத் தம்மாலான உதவிகளையும் வழங்கத் தயாராக உள்ளதாக அவர்கள் உறுதியளித்தனர்.

# ஒழுக்க அடிப்படையிலான கல்வியே அதிசிறப்புத்தரும்

(உடுவில்)

"மாணவர்களை சிறந்த கல்விமான்களாக்குவதை விட ஒழுக்க சீலர்களாக வளர்த்துவிடுவதே ஆசிரியர்கள் மனித சமுதாயத்துக்குச் செய்யும் மிகப் பெரிய சேவையாகும். இன்றைய மாணவர்களின் கீழ்ப்படிவும், ஒழுக்கமும் கட்டுப்பாடும் பெருமளவில் சீர்குலைந்து விடுவதற்கு தனியார் கல்வி நிறுவனங்களே மிக முக்கிய காரணிகளாக அமைந்து விடுகின்றன என்ற கசப்பான உண்மையையும், நாம் மிக கவனித்து உணர்ந்துகொள்ள வேண்டும். முன்னர் பாடசாலைகளில் கல்வியைவிட ஒழுக்கத்தையே கூடுதலாக மாணவ சமுதாயம் பெற்றது.

இவ்வாறு சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு. சி. குமரவேல் ஏழாலை தெற்கு அ. மி. த. க. பாடசாலைப் பரிசளிப்பு விழாவில் பரிசளிப்பு பேருரை நிகழ்த்துகையில் வலியுறுத்தினார்.

மானிப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. ச. தனஞ்செயன் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் அவர் தொடர்ந்து பேசுகையில், "அதிகாலை ஐந்து மணிக்கே நித்திரைவிட்டெழுந்து தனியார் கல்வி நிலையத்துக்குச் செல்லும் மாணவர்கள் பின்பு பாடசாலைகளுக்குச் சென்று மாலை வீடு திரும்பாமலும், விளையாட்டு, பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் எதிலும் கலந்து கொள்ளாமலும், மீண்டும் தனியார் நிறுவனங்களை நாடி ஓடுகின்றனர் இதனால் களைப்பும், அலுப்பும் அடையும் மாணவர்கள் விரக்தியடைந்து கல்வியைத் தொடர முடியாமல் தவிப்பதுடன், சிலர் வீதிகளைச் சுற்றித் திரிவதிலும், சிலர் வெளிநாடுகளில் வேலை தேடி அலைவதிலும் காலத்தைக் கழித்து விடுகின்றனர். இவ்வித நிலை தொடருவது தமிழ் இனத்துக்கும், இந்த நாட்டுக்கும் நல்லதல்ல என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. இவ்வித்தியாலய அதிபர் திரு. நவரத்தினத்தின் சேவையையும் பாராட்டவேண்டியதே" என்றார்,

இவ்விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய யாழ். மாவட்டப் பிரதம கல்வி அதிகாரி திரு. ஆர். சுந்தரலிங்கம் அதிபரின் ஆளுமைத் திறனையும், மாணவர்களின் ஒழுக்க கட்டுப்பாடுகளையும் பாராட்டியதுடன், விளையாட்டுத் துறையில் அவர்களை ஊக்குவிக்கும் பொருட்டு ஐந்நூறு ரூபாவை அன்பளிப்பாக வழங்குவதாக உறுதியளித்தார்.

முன்னாள் ஏழாலை கிராமோதய சபைத் தலைவரும், சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கணக்காளருமான திரு. கந்தையா மகாதேவன் வரவேற்புரை நிகழ்த்தினார். உடுவில் உதவி அரசாங்க அதிபர் திரு. ஆ. மகாலிங்கம், யாழ். பல்கலைக் கழக ஆங்கில விரிவுரையாளர் திரு. வை. குணரத்தினம், ஏழாலை தெற்கு திருச்சபைப் பங்குக் குருவானவர் ஏ.வி.ஜேசுதாசன் மேற்படி வித்தியாலய அதிபர் திரு ஆ. நவரத்தினம் ஆகியோரும் பேசினார்கள். இறுதியில் திரு சி. குமரவேல் பரிசில்களை வழங்கினார். பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் திரு. த. யோன். துரைராசா நன்றியுரையாற்றினார்; மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

# வடிகால் புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

அண்மையில் ஏற்பட்ட பெருவெள்ளத்தினால் ஏற்பட்ட அழிவுகள், குறிப்பாக அச்சுவேலி தோட்டச் செய்கையாளருக்கு ஏற்பட்ட அழிவுகளைக் கண்ணுற்ற அச்சுவேலி வடக்கு கதிரொளி சனசமூக நிலைய நிர்வாகிகள் இத்துர்ப்பாக்கிய நிலை மீண்டும் ஏற்படக் கூடாதென எண்ணி, இளைஞர்களினதும், கிராம மக்களினதும் கடை உரிமையாளர்களினதும் உதவியுடன் சிரமதான பணியில் ஈடுபட்டு பல்லாண்டு காலமாய் புறக்கணிக்கப்பட்டு வடிகால்கள் இருந்த இடமே தெரியாது புற்றும் புதருமாய்க் கிடந்தவற்றை மீண்டும் புனரமைத்துள்ளனர்.

மேலும் தொடர்ந்து வேலைகள் நடைபெறுகின்றன. இப்பாரிய புனரமைப்பைச் செய்ய உதவிய அனைவருக்கும் குறிப்பாக இளைஞர்களுக்கு சன சமூக நிலையத்தினர் நன்றி கூறுவதுடன் தொடர்ந்து சமூக நலன் கருதி எடுக்கப்படும் முயற்சிகளில் ஒத்துழைப்பு நல்கி ஊக்கப்படுத்துமாறும் கேட்டுக் கொண்டுள்ளனர்.

# ஆங்கில கல்வியில் மாணவர் ஊக்கம் பெற வேண்டும்

(புலோலி)

"வல்வெட்டித்துறை மக்கள் வங்கி ஊழியர் நலன் புரிச்சங்கம் தமது ஊழியர்களின் நலன்களில் மாத்திரமன்றி எதிர்காலச் சந்ததியினரான இளைஞர், யுவதிகளுக்கு கல்வியுடன் தொடர்புடைய பல்வேறு சேவைகளை இலவசமாக வழங்கிவருவது வடமராட்சிப் பகுதி மக்களுக்குக் கிடைத்த வரப்பிரசாதமாகும்."

இவ்வாறு, வல்வெட்டித்துறை மக்கள் வங்கி ஊழியர் நலன் புரிச்சங்கத்தால் நடாத்தப்பட்ட ஆங்கிலச் சுருக்கெழுத்து அறிவுப்போட்டியிலே பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பரிசில்களை வழங்கிவைத்து உரையாற்றிய நெல்லியடி மத்திய மகாவித்யாலய அதிபர். திரு ஸ்ரேய் காந்தராஜ் குறிப்பிட்டார்.

வல்வெட்டித்துறை அமெரிக்கன் மிஷன் தமிழ் கலவன் பாடசாலையில் நடைபெற்ற இவ்விழாவிற்கு வல்வெட்டித்துறை மக்கள் வங்கி முகாமையாளர் திரு எஸ். சேனாதிராஜா தலைமை தாங்கினார்.

தொடர்ந்து அதிபர். திரு. ஸ்ரேய்காந்தராஜ் பேசுகையில் சர்வதேச மொழியான ஆங்கிலத்தை மாணவர்கள் நன்கு கற்றுக்கொள்ள வேண்டும். ஆங்கிலத்தின் மூலமே மனிதன் பூரண அறிவைப் பெற்றுக்கொள்ள முடியும். ஆங்கில்க் கல்வியை மாணவர்கள் திறம்படக் கற்றுக் கொள்வதற்கு ஆசிரியர்கள் முன்னின்று உழைப்பதுடன் பொதுசனநிறுவனங்களும் முன்வரவேண்டும். வல்வெட்டித் துறை மக்கள் வங்கி ஊழியர் நலன்புரிச்சங்கம் இலவசமாக ஆங்கில சுருக்கெழுத்துப் பயிற்சி வகுப்பு போன்ற வகுப்புகளை நடாத்தி வருவது சிறப்பானதாகும் என்றார்.

தேசிய இளைஞர் சேவை மன்ற யாழ். மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி செல்வி. மகேஸ்வரி செல்லத்துரை உரையாற்றுகையில், "இன்று இளைஞர், யுவதிகள் சுருக்கெழுத்து, தட்டச்சு பயிற்சிகளைப் பெற்றுக் கொள்வதன் மூலம் பெரும் நன்மைகளைப் பெற்றுக்கொள்ளமுடியும் வல்வெட்டித்துறை மக்கள் வங்கி ஊழியர் நலன்புரிச்சங்கம் மேற்கொண்டு வரும் இலவச பயிற்சி நெறிகளின் முழுமையான பயனையும் இளைஞர், யுவதிகள் பெற்றுக்கொள்ள வேண்டும். சுருக்கெழுத்து, தட்டச்சு பயிற்சிகளை வழங்குவதற்கு இளைஞர் சேவை மன்றத்தில் நிதி தட்டுப்பாடாக உள்ளது" என்றார்.

வதிரி தேவரையாளி இந்துக் கல்லூரி தொழில் நுட்பப் பிரிவு பொறுப்பாசிரியர் திரு. எஸ். வீரசிங்கமும் உரையாற்றினார். திரு. க. சின்னராஜன் நன்றியுரை கூறினார் போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்களை திரு. ஸ்ரேய் காந்தராஜ் வழங்கினார்.

போட்டியின் போது இலவச சுருக்கெழுத்துப் பயிற்சிப் போதனாசிரியர் திரு. வ. சிவச்சந்திரதேவன் போட்டிகளை நெறிப்படுத்த கோப்பாய் கல்வி மூலவள நிலைய ஆசிரியை செல்வி எஸ். விமலா நெல்லியடி ம. ம. வித்தியாலய ஆசிரியை செல்வி. ரி. தேவராணி, செல்வி. கௌரி மனோகரி, செல்வி, வி. லிங்கவதி ஆகியோர் நடுவர்களாகக் கடமையாற்றினார்கள்.

# இலங்கை வானொலி 60வது ஆண்டு பூர்த்தி விழா

(கொழும்பு)

இலங்கை ஒலிபரபுக் கூட்டுத்தாபனம் 60 ஆண்டுகள் ஒலிபரப்பு பூர்த்தி விழாவை முன்னிட்டு நடத்திய வானொலி நாடகப் போட்டியில் செல்வி பாமா இராஜேந்திரம் முதலாவது பரிசைப் பெற்றுள்ளார். 5000 ரூபா பணப்பரிசு இவர் எழுதிய 'பந்தம்' என்ற நாடகப் பிரதிக்குக் கிடைத்திருக்கிறது, யாழ், கந்தர்மடத்தைச் சேர்ந்த செல்வி பாமா இராஜேந்திரம் தற்பொழுது யாழ் திருநெல்வேலி மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் தட்டழுத்தாளராக கடமையாற்றுகிறார்.

இரண்டாவதுபரிசான 3000 ரூபா புத்தூர் ஆவரங்காலைச் சேர்ந்த செல்வி உமா இராஜநாயகம் எழுதிய அர்ச்சனை மலர்கள் என்ற நாடகப் பிரதிக்கு கிடைத்திருக்கிறது.

மூன்றாவது பரிசான 2000 ரூபா அவிசாவலையைச் சேர்ந்த திருமதி இந்திரா சூரியகுமாரன் எழுதிய 'திருப்பங்கள்' என்ற பிரதிக்கு கிடைத்திருக்கிறது. இந் நாடகப் போட்டி பற்றி வானொலியைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் குறிப்பிடும் பொழுது "இந்த நாடகப்போட்டிக்குநாட்டின் நாலா பக்கத்திலுமிருந்து பிரபல எழுத்தாளர்கள் முதல் சாதாரண நேயர்கள் வரை பிரதிகள் எழுதி அனுப்பியிருந்தார்கள்" இந்தியாவிலிருந்தும் சிலநாடகப்பிரதிகள் போட்டிக்குவந்தன.

எல்லாமாக 664 பிரதிகள் வந்தன. 40 பிரதிகள் மட்டுமே ஒலிபரப்புக்குத் தகுதியாகக் காணப்பட்டன. இந்த 40 பிரதிகளும் வாரா வாரம் வானொலியில் ஒலிபரப்பாக ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன" என்றும் சொன்னார்.

# ஈழதீபம் சுடரவுள்ளது

(வேலணை)

வேலணை கலை இலக்கியவட்ட வெளியீடாக எதிர்வரும்தை மாதம்முதலாந்திகதி தொடக்கம் "ஈழதீபம்" என்னும் மாதாந்த சஞ்சிகையொன்று வெளியிடப்படவுள்ளது.

தீவக எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் வகையில் வெளிவரவிருக்கும் இச்சஞ்சிகை கலை, பொருளாதார விடயங்களை உள்ளடக்கியதாக அமையும். இவ்வெளியீட்டில் தங்கள் பங்களிப்பை வழங்க விரும்புவோர் வேலணை கலை இலக்கிய வட்டத்தினருடன் தொடர்பு கொள்ளும்படி கேட்கப்படுகிறார்கள்.

# காட்டுக்குள் சடலம்

சில தினங்களுக்கு முன்னர் ஓட்டமாவடியிலிருந்து சடத்திச் செல்லப்பட்டதாகக் கூறப்படும் முஸ்லிம் பிரமுகர் ஒருவரின் சடலம் காட்டில் கண்டெடுக்கப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

Commerce
DAY CLASS
ஆரம்பம்: 16.12.85 திங்கள் காலை 8 மணி
(மிகவும் ஒழுங்கான வகுப்புக்கள், திறமையான ஆசிரியர்களின் சேவைக்கு)
New Master Institute
B. M. C. Lane, JAFFNA.

86 A/L DAY CLASS
3ம் பிரிவு
ஆரம்பம் 16-12-85
திங்கள் காலை 11 மணி
(எமது வழமையான ஆசிரியர் குழுவினால்)
விபரங்கட்கு:-
NEW MASTER INSTITUTE
BMC LANE. JAFFNA.

### உதய சிந்தனை

*தீய நினைவொழிந்து நெஞ்சைத் தூயதாக்குக, நின் விரோதியர் மீதேனும் பகைமை கொள்ளேல், அனைத்துயிர்களையும் அன்பால் தழுவுக.*

*-கௌதம புத்தர்*

37, கண்டி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 23336

## இதய ஒலி

13-12-85 வெள்ளிக்கிழமை (குரோதன) கார்த்திகை-28

# நல்லதொரு சந்தர்ப்பம் மீண்டும் வருவது சந்தேகம்

திருமலையில் இரு தமிழ் யுவதிகள் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

மூதூரில் வீட்டுக்குள்ளிருந்த ஒருவர் வெளியே இழுத்துவரப் பட்டு சுட்டுக் கொலை செய்யப்பட்டார்.

கிளிநொச்சியில் வயலில் வேலை செய்து கொண்டிருந்த விவசாயி ஒருவர் துப்பாக்கி வேட்டுக்கு இரையானார்.

எமது நேற்றைய பத்திரிகையின் முதல் பக்கத்தில் வெளியான மூன்று செய்திகள் இவை.

அரசாங்கம் மிக நேர்மையாகக் கடைப்பிடிக்கும் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின்கீழ் இடம் பெற்ற மூன்று சம்பவங்கள் இவை.

ஆயுதங்களை ஏந்திக்கொண்டு, தமிழ்ப்பகுதிகளில் காவல் புரிபவர்கள் நடத்திவரும் அட்டூழியங்களினால் இடம் பெற்ற மூன்று சூட்டுச் சம்பவங்கள் இவை.

இவ்வாறு கொலைசெய்யப்பட்டவர்களைப் பயங்கரவாதிகள் என்றும் கொலைகாரர்கள் என்றும் அரசாங்க அறிக்கைகள் வர்ணிக்கும்.

இவைகளைப்பற்றி விசாரணை செய்யவென நியமிக்கப்பட்ட கண்காணிப்புக் குழு ஸ்தல விசாரணை நடத்தும்; சம்பவ இடங்களைப் பார்வையிடும்; அறிக்கைகளைத் தயாரிக்கும்.

சர்வதேசத்தின் கண்களுக்கு ''ஜனநாயக நியாயத்தை'' எடுத்துக்காட்ட நியமிக்கப்பட்ட இக்குழுவின் அறிக்கைகளை மனச்சாட்சிக்கு மதிப்பளித்து, விசுவாசமாக ஆட்சியாளர்கள் அங்கீகரிப்பார்களா என்பதைப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

அதற்கு முன்னர் கண்காணிப்புக்குழு உறுப்பினர்களிடையே அறிக்கைகளைத் தயாரிப்பதில் ஏற்படும் கருத்து வேறுபாடுகள், ''அங்கு ஏதோ கஷ்டம் ஏற்பட்டுள்ளது'' என்பதை உணரவைக்கின்றன.

ஆயுதப்படைகளின் அட்டகாசமா, தமிழ்ப்போராளிகளின் தீவிரமா சில சம்பவங்களுக்கு அடித்தளமாக அமைந்தது என்பதில்தான் குழு உறுப்பினர்களிடையே கருத்து வேறுபாடு ஏற்படக் காரணமென்றால், நோயைக் கண்டுபிடிப்பது இவர்களுக்குச் சுலபமல்லவா?

அந்த நோய் ஆட்சியாளர்களுக்கு இதுவரை தெரியாததல்ல!

இருப்பினும், நோய்வாய்ப்பட்டிருக்கும் இனத்தின் உண்மைநிலையை அறிவதற்கு, கண்காணிப்புக் குழு தமிழகம் சென்று போராளிகளின் தலைவர்களையும் முக்கியஸ்தர்களையும் சந்தித்துப் பேச வேண்டுமென்பது குழு உறுப்பினர் ஒருவரின் விருப்பம்.

திம்பு, டில்லி, ஒமான், டாக்கா என்று பல நாடுகளுக்கெல்லாம் சென்று, சந்திப்புகளையும், பரிசோதனைகளையும் நடத்திய வல்லுநர்களாலும். பரிவாரங்களாலும் கண்டுபிடிக்க முடியாததையா கண்காணிப்புக்குழு கண்டறியப் போகின்றது?

சர்வகட்சி மாநாட்டிலிருந்து, திம்பு, டில்லிப் பேச்சு வார்த்தை வரையாக இழுத்தடித்து, இதுவரை காலத்தைக் கடத்தி ஆயுதப் படைகளைப் பலப்படுத்தி, தமிழினத்தை அதன் சொந்த மண்ணிலிருந்தே அழித்து ஒழிக்க எடுத்த நடவடிக்கைகளை தமிழ்ப் பெண்களின் கர்ப்பத்திலிருக்கும் பிஞ்சுகளே நன்கறியும்.

கண்காணிப்புக் குழுவின் பெயரால் இன்னும் கொஞ்சக் காலம் இப்படியே கடத்தி, இராணுவத் தீர்வைக்காண முயற்சி எடுப்பதை அறியாதார் இந்நாட்டில் எவருமிலர்.

'நாம் தனிநாடு கேட்கவில்லை: ஆனால் அந்த நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டோம்'' என்று தீர்க்கதரிசி தந்தை செல்வா அன்றொரு நாள் சொன்னதையே இன்று இரைமீட்டுப் பார்க்கின்றோம்.

கூட்டணி சமர்ப்பித்த மாற்று யோசனையும், வாஷிங்டனில் நடைபெற்ற மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களும் ஒன்றுடனொன்று இணைவானவை.

அமெரிக்காவிலும், இந்தியாவிலுமுள்ள சமஷ்டி அமைப்பின் கீழ் தமிழ்ப்பகுதி நிர்வாகத்தை உருவாக்குவது ஜே.ஆர். அரசாங்கத்துக்கு என்ன தீங்கை ஏற்படுத்தப் போகின்றது?

அருமையானதொரு சந்தர்ப்பம்: இதனைத் தவற விட்டால் மீண்டுமொரு தடவை இவ்வாறான சந்தர்ப்பம் கிடைக்குமென்பது சந்தேகமே!

---

**★ புதுடில்லி இலவு காத்த கிளியாகப் போகிறது**

# கொழும்பின் கசப்பு மிகுந்த பின்வாங்கும் நடவடிக்கை

எடுத்த எடுப்பிலேயே கொழும்பு இவ்வுபாயத்திற்குச் செயலுருக் கொடுக்க எத்தனித்தது போலும். ஏனெனில் புதுடெல்லிக்கும் தமிழர் விடுதலை இயக்கங்களுக்குமிடையே நிலவிய உறவுகளைக் கசப்பு அடையச் செய்யும் நோக்கத்துடன், இயக்கங்களானவை மேற்கொண்டுள்ள நிலைப்பாடு, 'அடங்காப் பிடாரித்' தனமானதும், நியாயமில்லாததுமாகும் எனக்காட்டுவதற்குக கொழும்பு எத்தனித்தது. இந்நோக்கம் நிறைவேறும் பொருட்டு, திம்பு-II ஆம் கட்டப் பேச்சுக்களில் அப்பட்டமாகப் பொறுமையைச் சோதிக்கும் செயல்களில் கொழும்புத் தூதுக்குழு இறங்கியது.

1984 சர்வகட்சி மாநாட்டில் கொழும்பு முன்வைத்த பிரேரணைகளானவை, நீதிநியாயமின்றி தமிழர் விடுதலைஇயக்கங்களின் நான்கு அடிப்படைக் கோட்பாடுகளையும்ஏற்க மறுத்திருந்தமை காரணமாக, அவ்வியக்கங்களினால் அப்பொழுதே நிராகரிக்கப்பட்டிருந்தன. இவ்வாறு மறுப்பிற்கு உட்பட்ட நான்கு கோட்பாடுகளில் ஒன்று யாதெனில், இலங்கைத் தீவினது தமிழ் பேசும் மக்களின் நியாய பூர்வமான பிரதிநிதிகள் இவ்விடுதலை இயக்கங்களே, என்பதாகும். இவ்விரண்டாம் கட்ட உரையாடல்களின்போது கொழும்பானது முன்வைத்த பிரேரணைகள், 1984 ஆம் ஆண்டின் ஏலவே நிராகரிக்கப்பட்ட பிரேரணைகளாகவே இருந்தமை இக்கோபமூட்டும் செயல்களில் ஒன்று.

அது போதாதென்று, கொழும்பு அரசாங்கத்தின் இராணுவம் யுத்த இடைநிறுத்த உடன்பாட்டைப் பாரதூரமாக மீறும் வகையில், இலங்கையில் பெண்கள், குழந்தைகள் உள்ளடங்கலாக, நூற்றுக் கணக்கான நிரபராதிகளான குடிசனங்களைப் படுகொலை செய்துமிருந்தது. இவை காரணமாக இரண்டாம் கட்டத் திம்பு உரையாடல்கள் இடை நடுவில் முறிந்தன.

ஆனால் கொழும்பு கையாண்ட இத்தந்திரோபாயம் தமிழர் விடுதலைப் போராளி இயக்கங்களிடம் பலிக்கவில்லை சினங் கொண்டு, பின்னர் நியாயம் காட்டவியலாதன. ஆகக் கூடிய செயல்களில் ஈடுபடுதற்குப் பதிலாக, தமிழர் விடுதலை இயக்கங்கள் இரண்டு விடயங்களை வலியுறுத்தி இயம்பின: ஒன்று, யுத்த இடை நிறுத்த உடன்படிக்கை செம்மையாக அனுசரிக்கப்படுதல் வேண்டும். இரண்டாவதாக, ஆக்கபூர்வமான இணக்க உரையாடல்கள் தொடர உதவியாக, தமிழ் மக்களுக்கு அதிகாரம் உரித்தாக்கல் அல்லது பரவலாக்குதற்கு ஏற்ற நியாயமான ஒரு பிரேரணைத் தொகுப்பினைக் கொழும்பு முன் வைக்க வேண்டும்.

அதன் பின்னர், புதுடெல்லி அதிகாரிகளுடன் நடத்திய தனிப்பட்ட கலந்துரையாடல்களில் கொழும்புத் தூதுக்குழு நெகிழ்ந்த ஒரு நிலைப்பாடு காண்பிக்கலானது. ஏனெனில், 1984 சர்வ கட்சி மாநாட்டில் (இ. தொ. கா) இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் சமர்ப்பித்த அதிகார உரித்தாக்கல் அல்லது அதிகாரப் பரவலாக்கல் பற்றிய பிரேரணைகளின் அடிப்படையில் இணக்கப் பேச்சுவார்த்தைகள் தொடரும் எதிர்கால வாய்ப்புகள் பற்றிப் 'பேச்சுத் தொடுக்க' அக்குழு முற்பட்டது. அத்துடன் அமையாது. தமிழர் விடுதலைப் போராளி இயக்கங்களினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு உருப்படியான அளவு இடம் கொடுக்கவும் அது சித்தமாக இருப்பதாகக் காட்டிக் கொண்டது. எவ்வாறாயினும், வாய்மொழியாகக் கொழும்பு விட்டுக்கொடுக்க முன்வந்தவற்றை இந்திய அதிகாரிகள் எழுத்துருவில் வடிக்கத்தொடங்கியதும், தூதுக் குழுத் தலைவர், திரு. எச். டபிள்யூ. ஜெயவர்த்தன, தாம் நிறைவேற்ற ஒத்துக்கொண்ட சிலவற்றினின்றும் நழுவித் தப்பித்துக்கொள்வதற்காக, 'கசப்பான ஒரு பின்வாங்கும் நடவடிக்கையில்' இறங்கத் தலைப்பட்டார். இருந்தாலும், புதுடெல்லி வலுவுறுத்தி நின்றமையின் பேரில், உரையாடல் நகல் திட்டமொன்று அங்குவைத்து முடிவுறுத்தப்பட்டது கொழும்பின் அங்கீகாரத்தை அது எதிர்பார்த்திருக்கிறது.

புலப்படும் எல்லா அறிகுறிகளின் படிக்கும். இவ்விளைவு கொழும்பு எதிர்நோக்கிய ஒன்றல்ல என எண்ணக்கிடக்கிறது புதுடெல்லியைத் தமிழர் விடுதலை இயக்கங்களுக்கு விரோதமாக்கும் தந்திரோபாயம் வெற்றியடைந்தது டாக்டர் ஏ எஸ். பாலசிங்கம், திரு. சி. சந்திரஹாசன், திரு. என். சத்தியேந்திரா ஆகியோர் நாடுகடத்தப்பட்டனர். இவையாவும் கொழும்பில் உளம் நிறைந்த களிப்பு விளைத்துக் கொண்டிருக்கையில் உரையாடல் நகல் திட்டம் உருப்பெற்ற செய்தி கிட்டியது. செய்தி கிடைத்ததுதான் தாமதம், பொங்கிய உவகை மாயமாய் மறையலாயிற்று.

முன்பு,சமாதானத்தை நடைமுறைப்படுத்துவதன் வாயிலாக ஈழத்திலுள்ள தமிழ் பேசும் மக்களின் பார்வையில் விடுதலைப் போராளிகளைத் தரம் இறக்குவது கொழும்பின் நோக்கமாக இருந்தது என்பதையிட்டு ஐயமில்லை. ஆனால் இப்பொழுதெனிலோ, அதிகார உரித்தாக்கல் அல்லது பரவலாக்கலுடன் சம்பந்தப்பட்டவகையில் ஓர் அரசியல் தீர்வு நோக்கிய இணக்க உரையாடல்களை நடத்திச்செல்வதற்கு, நிலைநிற்கவல்ல ஓர் அடிப்படையைக் கொழும்பு கருத்திற் கொள்ளவேண்டியிருக்கிறது அதுவும், முதன் முதலாக உலக அபிப்பிராயத்தின் முழுப் பார்வையும் இந்நடவடிக்கைகள்மீது பதிந்திருக்கையில் இவ்வாறு கொழும்பு செயலாற்றவேண்டியதாக இருக்கிறது.

இது சமாதான நடைமுறையைத் தோல்வியுறச் செய்து, அதன் அடிப்படைக் காரணத்தைப் போக்கியுள்ளது. இதுகாறும், இலங்கையில் தேசியப் பிரச்சினைக்கு 'இறுதித் தீர்வு' நாடியது இராணுவ முன்னேற்றம் என்றிருந்தது அத்திசையிலிருந்த நாட்டத்தை நகல் திட்டம் மாற்றியுள்ளது. எவ்வாறாயினும், கொழும்பிலுள்ள அரசியல் எத்தனங்கள் அனைத்தும் மொத்தத்தில் இராணுவத் தீர்வின் திக்கிலேயே செல்வது தெளிவாகத் தெரியும். ஏனென்றால், ஆயுதக் கொள்வனவு, இராணுவ, இராணுவத் துணை ஆளணிப் பயிற்சி, முதலாயின ஆயத்தங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இந்த ஆயத்தங்கள், யுத்த இடைநிறுத்த நிபந்தனைகளை மீறுவனவாக உள்ளன அவற்றுக்கு ஒரு 'சாக்குப் போக்கும்' முன்வைக்கப்படுகிறது; கொழும்பும் தமிழர் விடுதலை இயக்கங்களும் உடன்பாடுகண்டு கொண்ட பின்பு, 'எஞ்சிய பயங்கரவாதத்தை' வேரறுக்கும் தேவைக்காகவே இந்த ஆயத்தங்கள், எனவும் சாட்டுச் சொல்லப்படுகிறது.

புதுடெல்லியினின்றும் கொழும்புத் தூதுக்குழுமீண்ட பின்பு, 1985, செப்டெம்பர் நாலாம் திகதியன்று இலங்கை அமைச்சரவைக் கூட்டம் முதன் முதலாகக் கூட்டப்பட்டது அதன்போது நடைபெற்ற கலந்துரையாடல்களில் நகல் திட்டம் இடம்பெறவில்லை. அதன் அடுத்த கூட்டம் செப்டெம்பர் பதினொராம் திகதியன்றுநடக்கவிருந்ததாயினும், காரணம் கூறப்படாது அது ரத்துச்செய்யப்பட்டுவிட்டது. அதன் பின்னராவது, அமைச்சரவை எதிலும் இந்நகல் திட்டம் எனப்படும் ஆவணம் உரையாடலுக்கு எடுக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டமைக்கு அறிகுறிகள் எவையேனுமில்லை

கொழும்பிலுள்ள இந்த அரசியற் பிரயத்தனங்களின் மொத்தத் தாக்கம் ஓர் இணக்கப்பேச்சுக்கள் வாயிலான தீர்வின்பால்மாற்றப்படக்கூடியது எனவும், இம் மாற்றத்தைப் பெரும்பாலும் சாத்தியமாக்கக் கூடிய ஆள் ஜனாதிபதி ஜெயவர்த்தனவே எனவும் புதுடெல்லி அதிகாரிகள் சிலர் நம்புவதாகக் காணப்படுகின்றனர் இம்மாற்றம் வெறுமனே ஓர் அரசியல் விருப்பத்தினின்

...5ம் பக்கம் பார்க்க

> **'ஸ்போக்ஸ்மன்' பத்திரிகையில் வெளியான இக்கட்டுரையின் முதற் பகுதி நேற்று வெளியானது. இறுதிப் பகுதி இன்று பிரசுரமாகின்றது.**

பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி தேர்தல்; கொலையுண்ட அக்கினோவின் மனைவி

# எதிரணியினரின் ஏகமனதான வேட்பாளரானார்

## சர்வதேச கவனம் ஈர்ப்பு!

(மணிலா)

அடுத்த வருடம் பெப்ரவரி மாதம் நடைபெறவுள்ள பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி தேர்தல் சர்வதேசரீதியிலான கவனத்தைப் பெரிதும் ஈர்க்கக் கூடியதாக அமையவுள்ளது. தமக்கிடையேயான கருத்து வேறுபாடுகளை எதிர்க்கட்சிகள் நீக்க, கொலையுண்ட எதிர்க்கட்சித் தலைவர் அக்கினோவின் மனைவி திருமதி கொறஸான் அக்கினோவை ஏகமனதாக ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்தியுள்ளதே இக்கவன ஈர்ப்பு நிலைக்குக் காரணமாகும்.

எதிர்க்கட்சிகளின் இத்தீர்மானத்துக்கமைய ஜனாதிபதி வேட்பாளராக முன்னர் மனுத்தாக்கல் செய்திருந்த, திரு. லால் துணை ஜனாதிபதி வேட்பாளராக இப்போது போட்டியிடப்போவதாக அறிவித்துள்ளார்.

பிலிப்பைன்ஸின் மிகப் பெரிய எதிர்க்கட்சியான 'யுனெடோ' வின் வேட்பாளர்களாக இவர்கள் போட்டியிடுகின்றனர்.

ஆளும் கட்சியின் சார்பில் ஜனாதிபதி பெர்டினனட் மார்க்கோஸ் போட்டியிடுகிறார் துணை ஜனாதிபதி வேட்பாளராக திரு. டொலண்டினோ மனுத் தாக்கல்செய்துள்ளார்.

இது இவ்வாறு இருக்க, கொலைசெய்யப்பட்ட எதிர்க்கட்சித் தலைவர் அக்கினோ வழக்கில் சமீபத்தில் இராணுவத் தளபதி உட்பட அதிகாரிகள் பலரும் அரசாங்கத்தால் நிரபராதிகள் எனக் கூறி விடுதலை செய்யப்பட்டிருந்தனர்.

இதனால் சிறைபெற்ற திருமதி அக்கினோ ஜனாதிபதி மார்க்கோஸை வெகுவாகக் குற்றஞ் சாட்டியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

'சாட்டில்'

## லிபிய ஆக்கிரமிப்பை பிரான்ஸ் ஆதரிக்காது என்கிறார் பிரதமர்

(பாரிஸ்)

ஆபிரிக்காவில் கலவரங்கள் நீடிக்கும் 'சாட்' பகுதியில் லிபியா ஆக்கிரமிப்புச் செய்வதை அனுமதிக்க முடியாது என்று பிரான்ஸ் பிரதமமந்திரி திரு. மித்ரோன் அறிவித்துள்ளார்.

பிரான்ஸில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர் 'சாட்' மீதான எந்த ஒரு ஆக்கிரமிப்பையும் பிரான்ஸ் சகிக்காது என்று சொன்னார்.

## அஸாமில் பிரதமர் சூறுவளி பிரசாரம்; தேர்தல்- டிச. 16ல்

(கொஹாட்டி)

அஸாம் மாநில சட்டசபைத் தேர்தல் அமைதியாகவும் ஒழுங்காகவும் நடைபெற சகல ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக தேர்தல் கமிஷன் அறிவித்துள்ளது

இத்தேர்தல் எதிர்வரும் திங்கட்கிழமைநடைபெறுகின்றது.

பிரதமமந்திரி திரு. ராஜீவ் காந்தி இத்தேர்தலையொட்டி சூறுவளிப் பிரசாரம் செய்து வருகின்றார்.

அஸாம் ஒப்பந்தம் செவ்வையாகச் செயற்படுத்தப்படும் என்று அவர் அறிவித்துள்ளார்.

## தென்னபிரிக்க அரசின் செயற்பாட்டுக்கு அமெ. வர்த்தகக் கம்பனிகள் கண்டனம்

(ஜொஹனஸ்பேக்)

தென்னபிரிக்க அரசின் செயற்பாடுகள் சிலவற்றிற்கு எதிராக அங்குள்ள அமெரிக்கக் கம்பனிகள் போர்க்கொடி தூக்கியுள்ளன. நெருக்கடி காலகட்டத்தை நீக்கவேண்டும், சகல இன மக்களுக்கும் ஒரே கல்விமுறை இருக்கவேண்டும் என்று மேற்படி வர்த்தகக் கம்பனிகள் வற்புறுத்தியுள்ளன.

இது இவ்வாறு இருக்க, தென்னபிரிக்காவில் சிறை வைக்கப்பட்டுள்ள தேசிய வாதத்தலைவர்களை பிரிட்டோரியா அரசு விடுதலை செய்ய வேண்டும் என்று "காமன் வெல்த்" வற்புறுத்தி வந்தாலும் அந்த நாட்டின் மீதான பொருளாதாரத்தடைகளைபிரிட்டன் எதிர்த்தே வரும் என்று பிரிட்டன் வெளிநாட்டமைச்சர் கூறியுள்ளார்.

## ஆசிரியர் கிளர்ச்சி; முதல்வரின் சமரஸ முயற்சி வெற்றி

(சென்னை)

ஒருமாத காலத்திற்கு மேலாகத் தொடர்ச்சியாகப் போராட்டம் நடத்தி கடமையைப் பகிஷ்கரித்துவந்த தமிழ்நாடு ஆசிரியர் பிரச்சினையை முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் சுமுகமாகத் தீர்த்தவைத்து விட்டதாக நேற்றுக் காலை அறிவிக்கப்பட்டது. ஆசிரியர் சங்கக் கூட்டுச்செயற்குழுப் பிரதிநிதிகளுடன் மூன்று மணித்தியாலங்கள் வரை மனம்திறந்து ஆலோசனை நடத்தி அவர் இப்பிரச்சினையைத் தீர்ப்பதில் வெற்றி கண்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

முப்பத்தொன்பது தினங்களாக நடத்திவந்த வேலை நிறுத்தத்தை ஆசிரியர்கள் நேற்றுடன் விலக்கிக்கொண்டு விட்டனர் என்றும் எதிர்வரும் திங்கட்கிழமை அவர்கள் கடமைக்குத் திரும்புவர் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

மாநில அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட தனிநபர் கமிஷன் ஆசிரியர்களின் ஊதிய உயர்வு முதலான கோரிக்கைகளை ஆராயும் என்று முதலமைச்சர் மேற்படி பிரதிநிதிகளிடம் உறுதியளித்ததாகவும் தகவல் வெளியாகியுள்ளது

இப் போராட்டம் தொடர்பாகக் கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ள சகல ஆசிரியர்களும் விடுதலை செய்யப்படுவர் என்ற உறுதி மொழியையும் அவர் வழங்கியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இத் தகவலை உள்துறைச் செயலர் திரு. ரி. வி. வெங்கடேஸ்வரன் வெளியிட்டார்.

மேற்படி ஆசிரியர் போராட்டத்தின் விளைவாகத் தமிழ் நாட்டில் கல்வி நிலை பெரிதும் பாதிக்கப்பட்டது. தி. மு. க.



உட்பட பல எதிர்க் கட்சிகள் இது குறித்து அரசைக் குறை கூறியிருந்தன. அரசுக்கு எதிராக சென்ற புதன்கிழமை வேலை நிறுத்த மூஸ்தீபைக்கூட எதிர்க் கட்சிகள் மேற்கொண்டிருந்தன என்பன இங்கு குறுப்பிடத்தக்கன.

முதலமைச்சர் இப் பிரச்சினையின் ஆரம்பத்தில் சற்று பிடிவாதமாகவே இருந்துவந்தார். போராட்டம் நடத்தி கல்வியைக் குழப்ப முயன்றால் புதியவர்கள் நியமிக்கப்படுவர் என்றும் எச்சரித்திருந்தார். பின்னர் தனது வழமையான சாணக்கியம் மூலம் இப் பிரச்சினையில் வெற்றி கண்டுவிட்டார் என அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

### கொழும்பில்...

- 4ம் பக்கத் தொடர்

றும் பிறந்த பணியல்ல ஓர் அடிப்படைப் பாரதூரக் கருத்தேற்புப் பெயர்வும் அதனோடு சம்பந்தப்பட்டிருக்கிறது. 'பிரித்து ஆளும்', பண்பற்றதாகப் பயன்பட்டை விட்டு, அவ்விருப்பமானது முரண்பாட்டு முகாமையும் கருத்தொருமிப்பு வளர்த்தலும் தொடர்பான அதி நவீன தந்திர உபாயத்தின் மீது லயித்தலும் வேண்டும்.

கடந்த காலத்தில் இலங்கை ஜனாதிபதியும் அவரது கட்சியினரும் இம் மாற்றத்தை நிறைவேற்றும் அத்தகைய ஆற்றல் படைத்தவர்களாகக் காணப்படவில்லை. ஆகவே, இத்தந்திர உபாயத்தை அவர் இப்பொழுது கற்றுக் கொள்வார் எனப் புதுடெல்லி எதிர்பார்த்தற்குத் தர்க்கரீதியான அடிப்படையெதுவும் கிடையாது. ஆகையால், நிகழப்போவது என்னவெனில், நம்பிக்கை எதிர்பார்ப்பு என்பவற்றைப் பொறுத்த மட்டில் புதுடெல்லி ஓர் இலவு காத்த கிளியாகப் போகிறது.

(முற்றும்)

### யூகோ. அரசுக்கு நெருக்கடி

(பெல்கிரேட்)

யூகோஸ்லேவிய அரசுக்கு எதிராக பெரிய அளவிலான எதிர்ப்பியக்கம் ஒன்று உருவாகியுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

இங்குள்ள அல்பானிய இனத்தவர் தம் சுய உரிமையை வற்புறுத்திக் கிளர்ச்சி செய்ததாகவும் அத்தகையோர் பலர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

### உங்களுடையதா?

செல்வராசா தவனேசன் என்பவரது பாஸ்போர்ட் கண்டெடுக்கப்பட்டு 'ஈழமுரசு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் காரியாலய நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.


### இலங்கை மின்சார சபையின் முக்கிய அறிவித்தல்

1985-12-12 -ந் திகதி வியாழக்கிழமை ஈழநாட்டில் பிரசுரித்த மின்தடை அறிவித்தலின்படி எதிர்வரும் 14ந் திகதி சனிக்கிழமையும், 15ந் திகதி ஞாயிற்றுக்கிழமையும் காலை 7-00 மணி தொடக்கம் மாலை 5-00 மணி வரை நடைமுறைப்படுத்த இருந்த மின்தடை தவிர்க்க முடியாத காரணங்களையிட்டு நீக்கப்பட்டுள்ளது. ஆகவே பத்திரிகையில் குறிப்பிடப்பட்ட இடங்களுக்கு எதிர்வரும் சனி, ஞாயிறு ஆகிய இரு தினங்களுக்கும் மின் தடை ஏற்படாது என இத்தால் அறியத்தருகின்றேன்,

இலங்கை மின்சார சபை, சுன்னாகம்.

மின் பொறியியலாளர்; யாழ். பிரதேச அலுவலகம்.


### மரண அறிவித்தல்

### அகஸ்தீன் மனோகரராசா

நெடுந்தீவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் கணேசபுரத்தில் வசிப்பவருமான அகஸ்தீன் மனோகரராசா அகால மரணமானார்: இவர், செல்வராணியின் அன்புக் கணவரும், சிந்துயாவின் தந்தையும், காலஞ் சென்ற கபிரியேல் அகஸ்தீன் பிரகாசி என்பவரின் மகனும், டோமினிக், அந்தோனிப்பிள்ளை, யேசுநாயகம், அமிர்தநாயகம், சேவியர், யாக்கோப்பு, அருள்மணி, எமிலியானுஸ் பிள்ளை, இராசாத்தி, அன்பு ஆகியோரின் சகோதரரும், வரப்பிரகாசம், மரியதாஸ், பிரான்சிஸ் சேவியர், எலிசபேத் என்போரின் மைத்துனரும், யக்கரியாஸ், இராக்கினியம்மா ஆகியோரின் மருமகனுமாவர். ஈமக்கிரிகைகள் 13-12 85 வெள்ளிக்கிழமை மாலை மூன்று மணியளவில் கிளிநொச்சி சேமக்காலையில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர்கள் ஏற்றுக் கொள்ளவும்.


**ICMA Section A**
**May - '86 Exam.**

A/L முடிவுகளை எதிர்பார்த்திருந்த மாணவர்கள் உடன் சேர்ந்து இப்பொழுது நடக்கும் வகுப்பில் படிக்கலாம். சென்ற இரு வாரங்களில் நடந்த பாடங்கள் திருப்பிக் கற்பிக்கப்படும்.

FEES:- 3 பாடங்களுக்கும் ரூபா 600/- மட்டுமே.
[இரண்டு தவணைகளில் செலுத்தலாம்]

Lecturers:- M/s K. Jeyaratnam
S. Kathirgamanathan
P. Sivapathasundaram

யாழ்ப்பாணத்தில் 78ஆம் ஆண்டு முதல் ஸ்திரமாக ICMA வகுப்புகள் நடக்கும் ஒரே நிறுவனம்

குறிப்பு :- தேவைப்படின் கொழும்பு Oxonia Institute இற்கு மாறலாம்.

**Cantabia Institute,**
21, MAIN STREET, JAFFNA. PHONE: 24201

ஈழமுரசு

## கிளிநொச்சி சூட்டு சம்பவத்தில் 3விவசாயிகள் சுட்டுக்கொலை

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் இடம்பெற்ற கண்ணிவெடித் தாக்குதலினால் தடம்புரண்ட கவசவாகனத்தை மீட்டுக் கொண்டு வரும்போது இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் மேலும் இருவர் பலியாகியுள்ளார்கள். கணேசபுரத்தைச் சேர்ந்த அ. மனோகரராசா (36), உருத்திரபுரத்தைச் சேர்ந்த க. இரத்தினம் ஆகியோரே மரணமடைந்தவர்கள். செவ்வாய்க்கிழமை மரணமானவர். பி. பழனிச்சாமி என அடையாளம் காணப்பட்டுள்ளது. மரணச் சடங்கிற்காக கிளிநொச்சி பிரஜைகள் குழு ஒவ்வொருவரினதும் உறவினர்களுக்கு தலா ஆயிரம் ரூபா வழங்கியுள்ளது.

நேற்றைய கூட்டத்தில் பேராசிரியர் சிவத்தம்பி:

# சாதிப்பிரச்சினையும், பெண்களுக்கு எதிரான சில நடவடிக்கைகளும்கூட மனித உரிமைமீறல்களே!

(அலுவலக நிருபர் ம. றாபன்)

"மனித உரிமைகள் பேணப்படுவதில்லை என்று நாம் பல கோரிக்கைகளை விடுக்கிறோம். ஆனால் நமது சமூகத்தில் மனித உரிமைகள் மீறப்படுவதை ஒருவரும் அறிவதில்லை. எமது சமூகத்தில் இன்றைய நிலையில் இரு முக்கிய விடயங்களை நாம் மனித உரிமைகள் மீறல் சம்பவமாக எடுக்கலாம். அவை சாதி அடிப்படையில் அசமத்துவத்தை பேணுகிறோம். மற்றது பெண்களுக்கு எதிரான சில நடவடிக்கைகள் இடம்பெறுதல் ஆகியனவே. இவை மனித உரிமைகளை நாம் மீறும் சம்பவங்கள்.

இவ்வாறு யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழு உறுப்பினர் பேராசிரியர் கா. சிவத்தம்பி நேற்று நடைபெற்ற மனித உரிமைகள் தின கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

யாழ் வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் வண. பிதா. ஜெயசீலன் அடிகள் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பேராசிரியர் சிவத்தம்பி தொடர்ந்தும் பேசுகையில், மனித உரிமைகளுக்காக நமது கோரிக்கை, போராட்டம் எம்மீது முக்கிய பொறுப்பை திணிக்கிறது. புதிய தொரு அரசியல் அந்தஸ்து போராட்டத்தின் ஊடாக மனித உரிமைகள் முன்வைக்கப்படுகிறது. எமது குரலில் நேர்மை உண்மை இருக்கவேண்டும் என்று சொன்ன அவர் இந்த மனித உரிமைகள் மீறல்களை எமது அடுத்த தலைமுறையினருக்கு ஏற்படுத்த நாம் வழிவகுக்கக்கூடாது. இன்று நடப்பது தேசிய இனப் பிரச்சினை என்கிறோம் ஆனால் அதற்கு தமிழ் மக்களிடையே சமூகமாற்றம் ஏற்படுவது மிக அவசியம் என்றும் சிலர் முதலில் அந்தப்பிரச்சினை தீரட்டும் பின்னர் எமது பிரச்சினைகள் தீர்ப்போம் என்கிறார்கள். ஆனால் நம்மிடையே மனித உரிமைகள் பேணப்பட்டாலே மற்றைய பிரச்சினைகளும் தீரும் என்றார்.

பேராசிரியர் கு. நேசையா பேசுகையில், மனித உரிமைகளுக்கு கூட்டுறவு முறையில் நமது சமுதாய நடவடிக்கைகள் மற்றும் கல்வி போன்ற முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் இந்தியாவில் காந்தியடிகளின் செயல்களே மனித உரிமைகளை நிலைநாட்டியுள்ளன. அதேபோல நாமும் மனித உரிமைகளைப் பேணுதலின் அவசியத்தை எடுத்துக் கூறினார்.

இனங்களுக்கிடையில் நீதிக்கும் சமத்துவத்துக்குமான அமைப்பின் வட பிராந்திய இயக்கத்தினர் இக்கூட்டத்தை ஒழுங்கு செய்தனர்.

மனித உரிமைகள் மீறல் சம்பவங்கள், வடக்கு கிழக்கில் பெண்கள் மீதான பலாத்காரம், மற்றும் இலங்கை சுதந்திரம் அடைந்தது முதல் இன்றுவரை தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் முதலியவற்றை சித்தரிக்கும் சுவரொட்டிகளும் இங்கு காட்சிக்கு வைக்கப்பட்டன.

## கோப்பாயில் சட்ட விரோத மின் வயர்கள் மீட்கப்பட்டு, மக்கள் முன் எரிக்கப்பட்டன!

(கலவியங்காடு)

கோப்பாயில சட்டவிரோத மின் இணைப்பு செய்யப்பட்டிருந்த பல வீடுகள் கண்டுபிடிக்கப்பட்டன. கோப்பாய் உப அலுவலக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் திரு ச. கருணைநாதன், மின் அத்தியட்சகர் திரு. வை. கோபாலகிருஷ்ணா, உப மின் நிலையக் கண்காணிப்புக் குழுவினர், மின ஊழியர்கள் மற்றும் பொதுமக்களில் சிலர் ஆகியோர் இச் சட்ட விரோத மின் இணைப்புகளைக் கண்டுபிடிப்பதில் ஈடுபட்டனர்.

இணைப்புகளுக்குப் பாவிக்கப்பட்ட சுமார் ஐயாயிரம் ரூபாவுக்கு மேல் பெறுமதியுடைய வயர்கள் பறிமுதல் செய்யப்பட்டு அவை உப அலுவலகத்துக்கு முன்னால் வைத்துப் பின்னர் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன. புதிய செம்மணி வீதி, விதானையார் வீதி, கலைமணி வீதி, குத்துணி வீதி, கட்டப்பிராய் பழம ரோட, ஆலங்குளி, டச், ரோட், வண்ணாங்குளம வீதி, குடியேற்றத் திட்ட வீடுகள் பகுதி ஆகிய இடங்களில் இச் சட்ட விரோத மின இணைப்புகள் துண்டிக்கப்பட்டன.

இதனால், இதுவரை கோப்பாய உப அலுவலக மின சாரப் பகுதியினால் மாலை 6 மணி தொடக்கம் இரவு 8-30 மணிவரை அமுலாக்கப்பட்ட மின்தடை நீக்கப்பட்டுள்ளதாகவும் சட்ட விரோத மின் பாவனையைத் தடை செய்வதில் உதவிய பலருக்கும் தாம நன்றி தெரிவிக்க விரும்புவதாகவும் உப அலுவலக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் திரு. ச. கருணைநாதன் தெரிவித்தார்.

### வ. பி. கூட்டுக்குழு வேண்டுகோள்

நவசமஜமாசக் கட்சியின் பொதுச் செயலாளர் திரு, விக்கிரமபாகு கருணரட்ணவை உடன் விடுதலை செய்ய வேண்டுமென வடபிரதேச தொழிற் சங்கங்களின் கூட்டுக்குழு கேட்டுக் கொண்டுள்ளது. சகல அடக்குமுறைச்சட்டங்களையும் வாபஸ் பெறும்படியும் கூட்டுக்குழு அரசாங்கத்தை வற்புறுத்துயுள்ளது.

### ஒருவர் மரணம் இருவர் காயம்

(வண்ணார்பண்ணை)

நேற்று அதிகாலை யாழ்.பஸ் நிலையத்துக்கு அண்மையில் தற்செயலாக குண்டு ஒன்று வெடித்ததனால் ஒருவர் ஸ்தலத்திலேயே பலியானார். மற்றும் இருவருக்கு பலத்த காயம் ஏற்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

### இயக்க மோதலை...

களை ஈழப போராட்டத்திற்கே அனுபபினோம்," "பிரச்சினைகளைப் பேசித் தீருங்கள்" போன்ற சுலோகங்களை அன்னையர்கள் தாங்கிச் சென்றார்கள்.

ஊர்வலத்தின் முடிவில் இயக்க மோதல்களுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் கோஷங்கள் எழுப்பப்பட்டு கொடும்பாவி எரிக்கப்பட்டது. காலை ஒன்பது மணிக்கு ஆரம்பமான இவ் ஊர்வலம் பகல 2-30 மணிக்கு முடிவடைந்தது.

### தோப்பூரில்....

நிறுத்தக் கண்காணிப்புக் குழு முன்னர் தமக்கு நடந்தவைகளைத்தெரிவிப்பதற்காக இவர்கள் நேற்றே திருமலைக்கு வந்து தங்கியுள்ளனர்.

### இன்ரசிற்றி....

மான வகையில் இடம்பெற்ற இக்குண்டு வெடிப்பு பல சந்தேகங்களையும் கிளப்பியுள்ளது.

### காங்கேசன்துறை....

காலை நான்கு மணியளவில் வெடித்த குண்டுச் சத்தம பல மைல் தூரங்களுக்குக் கேட்டதாகப் பொதுமக்கள் தெரிவித்தனர்.

குண்டு வெடித்த இடத்தில் இரத்தம் சிதறிக் கிடக்கக் காணப்பட்டது. அப்பகுதியில் நேற்றுக் காலை பெரும் பதற்ற நிலை உருவாகியது.

### புளொட்...

கொலைசெய்யப்பட்டவர்கள் ரவமூர்த்தி, ஜெகதீஸ்வரன், பண்டா ஆகியோர் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

### சுடப்பட்டு....

நேற்று நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் தர்மலிங்கம் (38) என்ற விவசாயியும், மற்றொரு தமிழரும் நேற்று மரணமானார்கள்.

### விமான விபத்தில்...

விமானச் சிப்பந்திகளுடனும் சென்ற அமெரிக்க டி. ஸி. 8 விமானமொன்று நேற்றுக் காலை ஆகாயத்தில் வெடித்து வீழ்ந்து நொருங்கியதால் அனைவருமே கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## அரிசி, மா, சீனி விலை மீண்டும் அதிகரிக்கப்படவுள்ளது!

(கொழும்பு)

இறக்குமதி செய்யப்படும் அரிசி, மா, சீனி ஆகியவைகளின் விலைகள் மீண்டும் அதிகரிக்கப்படவுள்ளன.

உணவுத் திணைக்கள ஆணையாளர் இதுபற்றி விரைவில் உத்தியோகபூர்வமாக அறிவிப்பார்.

கடந்த மாதம் பட்ஜட் நிதி ஒதுக்கீடுகளை நிதி அமைச்சர் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்குச் சில தினங்களுக்கு முன்னர் இவைகளின் விலை அதிகரிக்கப்பட்டது.

மீண்டும் இப்பொருட்களின் விலை அதிகரிக்கப்படுவது பற்றி உணவு கூட்டுறவுத்துறை அமைச்சர் நேற்று பாராளுமன்றத்தில் பேசுகையில், "இலங்கை நாணயத்தின் மதிப்பு குறைந்துள்ளமையாலும், தீவிரவாதிகளின் நடவடிக்கைகள் தொடர்ந்து இடம்பெறுவதாலுமே விலை அதிகரிப்பது தவிர்க்க முடியாதிருப்பதாகவும், இது போன்ற ஒரு காலகட்டத்தில் காசு நஷ்டமடைவதை அனுமதிக்க முடியா"தெனவும் குறிப்பிட்டார்.

### இரண்டு சம்பவங்கள்

குருநகர் மீன்பிடிக் கூட்டுத்தாபனத்தில் உள்ள ஈ. எல். எவ். வான் நேற்று முன்தினம் கடத்திச் செல்லப்பட்டதாக புகார் செய்யப்பட்டுள்ளது.

ஐம்பதினாயிரம் ரூபா பெறுமதியான இந்த வானை இனம் தெரியாத பதினைந்து பேர் எடுத்துச் சென்றனராம்.

யாழ். அபிவிருத்திச் சபை உப-அலுவலகம் ஒன்றில் இருந்து சில பெற்றோல் பெரல்களும சிலரால் எடுத்துச் செலலப்பட்டதாகவும் புகார் செய்யப்பட்டுள்ளது.

### யாழ் நகரில்....

சூட்டுக் காயத்துக்கு சிகிச்சை பெறுறார்.

அண்மையில் கொள்ளை இடம்பெற்ற வண்ணை வெங்கடேச வரதராஜப் பெருமாள் கோவிலை புகைப்படம் எடுப்பதற்காக ராணுவத்தினர் சென்றதாக அறிவிக்கப்பட்டது. கோவிலுக்கு அருகிலுள்ள வீடொன்றுக்குள் புகுந்து அங்கு எவரும் இல்லாததால் அருகாமையில் நிறுத்தப்பட்டிருந்த காரையும், சைக்கிளையும் சேதப்படுத்தினர். குறிப்பிட்ட வீட்டிலிருந்து சில பிரசுரங்களையும் எடுத்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இவ்வேளையில் நகரில் பல பகுதிகளிலுமிருந்து பலத்த குண்டு வெடிப்புச சத்தங்கள் கேட்டன. நகரின் கடைகள் பூட்டப்பட்டன, பஸ்கள்,வான்கள் நாலாபக்கத்தாலும் சிதறி ஓடின.

ராணுவத்தினர் கவசவண்டியிலும, நடந்தும் நகருக்குள் வந்து சுடத்தொடங்கினராம். மினசார நிலைய வீதியில் ஒருவரும், பஸ்நிலையத்துச சந்திக்கு அருகாமையில் மற்றொருவருமான இரு வயோதிபர்களும் சூடுபட்டுப் பலியானார்கள், பல பாடசாலைகளில் ஜி.சி.ஈ பரீட்சை எழுதிக்கொண்டிருந்த மாணவர் அரைகுறையாக மண்டபங்களை விட்டு வெளியேறினர்.

இச்சம்பவங்களையடுத்து நகரில் பெரும் பதற்றம் நிலவியது. இரவு வரை குண்டுச் சத்தங்கள் கேட்டவண்ணமேயிருந்தது.

அரசாங்கம் இதுபற்றி விடுத்துள்ள அறிக்கையில், பெருமாள் கோவிலுக்கு அருகிலி

### கச்சேரி பென்ஷன் 14, 15-ல் இல்லை

கச்சேரியூடாக இலங்கை வங்கி மூலம் இம்மாதம் பதினான்காம், பதினைந்தாம் திகதிகளில் கொடுக்கப்படவிருந்த ஓய்வூதியம் தவிர்க்க முடியாத காரணங்களால் இத்தினங்களில் வழங்கப்படமாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்காக வேறு தினங்களில வழங்கப்படும் எனவும், அதுபற்றி பின்னர் அறிவிக்கப்படும எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### வித்தியாலய பிரவேச பரீட்சை

வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தின் ஆறும் வகுப்பில் (ஆண்டு 7) கற்க விரும்பும் மாணவர்களுக்குரிய பிரவேசப் பரீட்சை, இம்மாதம் 21ஆந் திகதி நடைபெறும். பரீட்சைக்குரிய விண்ணப்பங்கள் இம்மாதம் 10ஆந் திகதிக்கு முன்னர் அனுப்பப்பட வேண்டும் என முன்னர் அறிவிக்கப்பட்டதாயினும், பெற்றோர்கள் பலரின் வேண்டுகோளுக்கிணங்க, விண்ணப்ப முடிவு திகதி இம்மாதம 16-ம் திகதி திங்கட்கிழமை வரை நீடிக்கப்பட்டுள்ளதாக வித்தியாலய அதிபர் அறிவித்துள்ளார்.

### காலமானார்

இறைவரித் திணைக்களத்தின் ஆணையாளராகக் கடமையாற்றிய திரு. கே. சிற்றம்பலம் காலமானார்.

ருந்த முகாமிலிருந்து ஈ. பி. ஆர். எல். எஃப் இயக்கத்தின் துண்டுப்பிரசுரங்கள், பெயின்ற், அரிசி, சீனி, மா ஆகியனவும் கைக்குண்டுகள் இராணுவத்தால் கைப்பற்றப்பட்டதாக அறிவித்துள்ளது.

முகாம் தாக்குதலை முடித்துக் கொண்டு இராணுவம் திரும்பிக் கொண்டிருந்தபோது தீவிரவாதிகள் அவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும் சுமார் இரண்டுமணி நேரம் இரு பகுதியினருக்கும் இடையே மோதல் இடம் பெற்றதாகவும் இரு குடிமக்கள் இதில் மரணமானதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"ஈழமுரசு" சாயிபாபா அட்வர்டைசிங் அஸோஸியேற்ஸ் ஸ்தாபனத்தாரால் 37, கண்டி வீதி யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகப் பகுதியில் 13-12 1985 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது. தொலைபேசி: 23336